# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337, நிகரி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0237/2015

ஆணை எண். 14 /2015

நாள்: 15/10/2015

திரு. அ. மனமோகனதாசன்,
பொற்படாக்குறிச்சி ஊராட்சி,
தச்சூர் அஞ்சல்,
கள்ளகுறிச்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - முறையீட்டு மனுதாரர்

திருமதி. சித்ரா,
க/பெ. திரு. வெங்கடேஷ்,
சோழம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர்,
சங்கராபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம். - எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவ்ட்டம், கள்ளகுறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த திரு. அ. மனமோகனதாசன் என்பவர் சோழம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சித்ரா, க/பெ. திரு. வெங்கடேஷ் என்பவர் போலியாக இந்து–தொம்பன் (S.C.) என சாதி சான்று பெற்று தலைவர் பதவி வகித்து வருகிறார் என இம்முறைமன்றத்தில் முறையீட்டு மனு சமர்ப்பித்துள்ளார். இம்மனுவானது இம்முறைமன்ற நடுவத்தில் மனு எண்.237 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், கள்ளகுறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த திரு. அ. மனமோகனதாசன் என்பவர் சோழம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சித்ரா. க/பெ. திரு. வெங்கடேஷ் என்பவர் போலியாக இந்து–தொம்பன் (S.C.) என சாதி சான்று பெற்று தலைவர் பதவி வகித்து வருகிறார் என இம்முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற சட்டம்–2014 சட்டப்பிரிவு 2 உட்பிரிவுகள் 7 மற்றும் 11–ல் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி ஊராட்சி மன்றங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இவ்வமைப்பின் விசாரணை வரம்பிற்கு உட்பட மாட்டார்கள். எனவே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட முறையீட்டு மனுவை விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் முடிவு செய்து அதன்படி ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

15/10/15
கண்காணிப்பாளர்

**பெறுநர்**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**விழுப்புரம் மாவட்டம்,**
**விழுப்புரம் (இணைப்புடன்)**

**நகல்**

**திரு. அ மனமோகனதாசன்,**
**பொற்படாக்குறிச்சி ஊராட்சி,**
**தச்சூர் அஞ்சல்,**
**கள்ளகுறிச்சி வட்டம்,**
**விழுப்புரம் மாவட்டம்**